[1st February 1966

THE HON. SRI V. RAMAIAH : (a) to (d) A statement [a] is placed on the Table of the House.

திரு. சி. வே. வேலப்பன் : இந்தக் குறிப்பில் இரண்டு வகையாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிகச் செலவாவதால் இத்திட்டத்தை ஒத்தி வைத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகும் செலவில் நாலில் ஒரு பகுதியை விவசாயிகள் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். நாங்கள் முன் வந்து அதை வசூல் செய்து கொடுக்கத் தயாராயிருக்கிறோம். அப்படிச் செய்கிற போது நான்காவது திட்டத்தில் இந்தத் திட்டத்தைச் சேர்க்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கொடுத்திருக்கும் பதிலில் அந்தத் திட்டம் ஆரம்பப் பரிசீலனை செய்யப்பட்டு அதனால் ஏற்படக்கூடிய செலவு, அதனால் ஏற்படும் பலன் இதையெல்லாம் பரிசீலனை செய்து அரசாங்கம் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறது. இப்போதுள்ள நிலையில் மற்றத் திட்டங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது இத்திட்டத்தை இப்போது எடுத்துக் கொள்வது சாத்தியம் இல்லை.

வீட்டு மனைகள் விற்பனை

* 41 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வீட்டு மனைகள் வாங்குவதையும் விற்பதையும் முறைப்படுத்த சட்டம் ஏதாகிலும் கொண்டு வரும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

கூட்டுறவு கடன்கள் வசூல் ஒத்திவைப்பு

* 42 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ம் ஆண்டில் பருவ மழை தவறியதால் கூட்டுறவு கடன்கள் வசூல் செய்வதை ஒத்தி வைக்கும்படி சர்க்காரால் உத்திரவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (a) No.

9-00 a.m. (b) Does not arise.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, 1964-வது ஆண்டில் பருவ மழை தவறியதின் காரணமாகக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்வதை ஒத்தி வைக்க

a Printed as Appendix I on pages 361 and 362.

1st February 1966]

வேண்டும் என்று தஞ்சை மாவட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் அரசினருக்கு வந்தனவா? ஆம் என்றால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: தஞ்சை மாவட்டத்தில் 'ஃப்ளட்' ஏற்பட்ட ஏரியாக்களில் மட்டும் கடனை வசூல் செய்வதற்கு போஸ்ட்போன்மென்ட், அதாவது எக்ஸ்டென்ஷன் செய்து கொடுக்கப்பட்டது.

திரு. கோ. சி. மணி: அவ்விதம் போஸ்ட்போன் செய்யப்பட்டது, எத்தனை ஆண்டுகள் கழித்து இதை வசூல் செய்து கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது? அவ்விதம் நிர்ணயித்திருந்த காலவரையறை முடிந்துவிட்டதா, இல்லையா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இப்படிப்பட்ட எக்ஸ்டன்ஷன் கொடுத்திருப்பது, ஷார்ட் டெர்ம் லோன் என்பதை மீடியம் டெர்ம் லோன் என்ற முறையில் கருதப்பட்டது. கும்பகோணம் கூட்டுறவு பாங்கைப் பொறுத்தவரையில் 196--ஏப்ரலுக்குள் வசூல் செய்யவேண்டும் என்றிருந்ததை 1965—ஏப்ரலுக்குள் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Is it not a fact that postponement or extension has been granted as far as Tirunelveli district is concerned in the matter of collection of loans taken from co-operative societies?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: No, Sir.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் இம்மாதிரி தள்ளிவைக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: ஏப்ரல் 1965-க்குள் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருப்பது, ஒரு இடத்தில் 85 ஆயிரம் ரூபாயும், மற்றொரு இடத்தில் 37 லட்சத்து 62 ஆயிரம் ரூபாயும்.

திரு. கோ. சி. மணி: இவ்விதம் 1965 ஏப்ரலுக்குள் வசூல் செய்ய வேண்டும் என்று ஒத்திவைக்கப்பட்ட தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டுவிட்டதா? இன்னும் பாக்கியிருக்கிறதா? அப்படியென்றால், எவ்வளவு பாக்கியிருக்கிறது?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தத் தகவல் என்னிடமில்லை.

திரு. ஆ. துரையரசன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வெள்ளப்பெருக்கு காரணமாக கடன் வசூல் செய்வது தள்ளி வைக்கப்பட்டது என்று பதில் சொன்னார்கள். என்னுடைய மூலக்கேள்வியில் பருவ மழை

பெய்யத் தவறியதின் காரணமாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டிருக்கிறேன். ஆகவே, அதற்கான விவரங்களைத் தனியாகத் தரமுடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : போஸ்ட்போன்மென்ட் பற்றிக் கேட்கப்பட்டது. இல்லை என்று சொன்னேன்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கெடு தள்ளி வைக்கப் பட்ட கடன் தொகை 85 ஆயிரம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கும்பகோணம் மத்திய கூட்டுறவு பாங்கிலிருந்து இந்தத் தொகை வழங்கப்பட்டதா ? அல்லது வேறு வகையில் வழங்கப்பட்டதா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : தஞ்சாவூரில் 85 ஆயிரம் ரூபாய், கும்பகோணம் பாங்கிலிருந்து 37 லட்சம் சில்லறை ரூபாய்.

அரசாங்க விளம்பரங்கள்

*43 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்தின் விளம்பரங்கள் தினத்தாள்களில் வெளி யிடப்படுவதில் கையாளப்படும் கொள்கை என்ன ?

(இ) எந்த அடிப்படையின்கீழ் பத்திரிகைகள் விளம்பரத்திற் காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) அரசாங்க விளம்பரங்களைப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு முன் அப்பத்திரிகைகளின் விற்பனைப் பிரதிகளின் எண்ணிக்கை, அவற்றில் பிரசுரமாகும் விஷயங்களின் தன்மை, தரம் முதலியன முக்கியமாகக் கவனிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட விளம்பரம் எந்தப் பகுதியில் பிரசுரிக்கப் பட்டால் நல்ல பலன் தரும் என்று ஆராய்ந்து அந்த பிரதேசத் தில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு விளம்பரம் தரப்படுகிறது.

அவதூறான செய்திகளையும், உணர்ச்சியைத் தூண்டும் தகவல்களையும் வெளியிடும் செய்திப் பத்திரிகைகளுக்கு அவை நல்ல முறையில் விற்பனையானாலும்கூட அரசாங்க விளம்பரம் தரப்படுவதில்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : பத்திரிகைகள் வருகின்ற தரத்தைப்பொறுத்து விளம்பரங்கள் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்விதம் தரத்தை நிர்ண யிப்பது யார் ?

கனம் திரு. கோ. பூவராகன் : தரத்தை நிர்ணயிப்பது அரசாங்கம்.